# பரிந்துரைகளின் செயலாக்கம்

# இயல் VI

# பரிந்துரைகளின் செயலாக்கம்

6.1. அரசியலமைப்புச் சட்ட திருத்தங்கள் மற்றும் மாநில அளவிலான சட்டங்கள் மூலம் நிறுவப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்பிகளை நடைமுறைபடுத்துவது உடனடித் தேவையாகும். நிறுவனமயமாக்கலின் ஒரு நிலையை தேர்தல் நடைமுறையானது முடித்துள்ளது. மக்களாட்சி முறையில் அமைந்த இந்த நிறுவனங்களை முழுமையடையச் செய்ய தகுந்த அதிகாரங்களை ஒப்படைப்பது இப்போது நிலுவையாக உள்ளது. இந்திய அரசமைப்புச்சட்டம் மற்றும் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 29 இனங்களுக்கு வகை செய்துள்ளன. இவ்வினங்களுக்கு அதன் உண்மையான பொருளையும் விளக்கங்களையும் அளிப்பது மாநில அரசின் கடமையாகும்.

6.2. ஊரக உள்ளாட்சி மன்றங்களின் செய்கடமைகள் மற்றும் அதிகாரங்களின் தன்மைகளாவன. (1) கட்டாய கடமைகள் (2) விருப்புரிமைகள் (3) முகமை (4) ஆய்வு செய்தல் (5) ஒப்படைக்கப்பட்ட செய்கடமைகள், ஊராட்சிகள் செய்ய வேண்டிய கட்டாய கடமைகள் பற்றி தமிழ்நாடு ஊராட்சி சட்டப்பிரிவு 110 குறிப்பிடுகிறது. அதேபோன்று சட்டப்பிரிவு 111 விருப்புரிமை கடமைகள் பற்றியும், சட்டப்பிரிவு 119 (2) முகமைக் கடமைகள் பற்றியும் குறிப்பிடுகிறது. மேற்படி சட்டத்தின்படி ஊராட்சிகளுக்கு ஆய்வு செய்யும் செய்கடமைகள் இல்லை. ஆனால் சட்டப்பிரிவு 257ன் படி அவைகளுக்கு வழங்கப்படவிருக்கும் அதிகார ஒப்படைப்பு மூலம் ஆய்வு செய்யும் உரிமையினையும் பெறும். ஊராட்சி ஒன்றியங்கள் கட்டாய கடமைகளை சட்டப்பிரிவு 112ன் படியும், விருப்புரிமைக் கடமைகளை சட்டப்பிரிவு 115ன் படியும், முகமைக் கடமைகளை சட்டப்பிரிவு 113.114 மற்றும் 123 மூலம் பெறுகின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் ஆய்வு செய்யும் பணியினை சட்டப்பிரிவு 114(2) ன் படியும், அதிகார ஒப்படைப்பு பணியினை சட்டப்பிரிவு 257ன் படியும் பெறுகின்றன. மாவட்ட ஊராட்சிகள் கட்டாயக் கடமைகளை சட்டப்பிரிவு 163 மூலமும், விருப்பக் கடமைகளை சட்டப்பிரிவு 164ன் படியும், நிலைக்குழுக்கள் மூலம் ஆய்வு செய்யும் பணியினை சட்டப்பிரிவு 97ன் படியும் அதிகார ஒப்படைப்பு கடமைகளை சட்டப்பிரிவு 257ன் படியும் பெறுகின்றன.

6.3. இக்குழுவிற்கு அளிக்கப்பட்ட பணி வரைமுறையின் படி வெவ்வேறு அரசுத் துறைகளில் தற்போதுள்ள அதிகாரங்களை எந்த அளவிற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்க முடியும் என்பது குறித்து இக்குழு முழுக் கவனம் செலுத்தியது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்கனவே உள்ள பணிகள் மற்றும் அதிகாரங்கள் ஆகியவற்றை குறிப்பிடுவதைக் காட்டிலும் கிராமப் புற வளர்ச்சிக்கு வள ஆதாரங்களை எவ்வாறு அதிகபட்சம் பயன்படுத்தலாம் என்பது குறித்தும் இக்குழு நன்றாகவே உணர்ந்துள்ளது. உள்ளூர் முன்னுரிமைகளுக்கேற்றவாறு திட்டங்களை மாற்றி சீரமைக்க எண்ணியுள்ளோம். இதனால் வீணான செலவுகள் தவிர்க்கப்பட்டு, விரைவான செயலாக்கம், உள்ளாட்சி அமைப்புகளுக்கு பதிலளிக்கும் கடமை உருவாகி, தேவையற்ற ஊழலை களையவும் வழி கோலும். தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளின் விருப்பம். உள்ளூர் மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் உள்ளாட்சிகளின் வலுவான, திறமையான ஒளிவு மறைவற்ற நிர்வாகம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு திட்ட செயலாக்கம் சம்பந்தமாக அரசிற்கு இக்குழு சில பரிந்துரைகளை செய்துள்ளது.

## ஊரக உள்ளாட்சி மன்றங்களின் நிருவாக அமைப்பு

6.4.1. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகியவைகளின் பணியமைப்பு முறையைப் பகுப்பாய்வு செய்யப்படவேண்டும். அப்போதுதான் இருக்கக்கூடிய தொழில்நுட்ப மற்றும் இதர பணியாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் மற்,றம் செய்கடமைகளை செயற்படுத்த போதுமான அளவில் உள்ளனவா என்பது உறுதிசெய்யப்படும்.

6.4.2. மாவட்ட நிலையில், மூன்று வேறுபாடான பணியமைப்புகள், ஊரக வளர்ச்சி வேலைகளை செயற்படுத்தப்பட உள்ளன. அண்மையில் மாவட்ட ஊராட்சி, நிறுவப்பட்டு பணியாளர்கள் சிலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து மாவட்ட ஊராட்சி பணிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் திட்ட அலுவலகம் என்பது இரண்டாவது பணியமைப்பாகும். இம்முகமையை மாவட்ட ஆட்சியர் தலைவராக இருந்து கொண்டு கட்டுப்படுத்துவதுடன், திட்ட அலுவலர் (1), உதவித்திட்ட அலுவலர்கள் (8), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (4) உதவியாளர்கள் (மதிப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி) (1), உதவியாளர்கள் (7), உதவிப்புள்ளியியல் புலனாய்வாளர் (2), இளநிலை உதவியாளர் (2), சுருக்கெழுத்தர் (3), தட்டச்சர் (2), ஒட்டுநர்கள் (5), அலுவலக உதவியாளர்கள் (7),

சாண எரிவாயு தொழில்நுட்பவியலர் (1) மற்றும் காவலாளி (1) ஆகியவர்கள் சேர்ந்த பணியமைப்பு உள்ளது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பணியமைப்பு மூலமாக, நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்கள் கவனிக்கப்படுகின்றன. மூன்றாம் அமைப்பாக மாவட்ட நிலையில் ஆட்சிய ரகம், ஊராட்சி தேர்தல், நிர்வாகம், ஆய்வு மற்றும் மேற்பார்வை ஆகியவற்றை கவனிக்கின்றன. மேலும், இரண்டு சிறப்புப் பணிகளை இப்பணியமைப்பு கட்டுப்படுத்துகின்றன. அதாவது மதிய உணவு திட்டங்கள் மற்றும் சிறு சேமிப்புகளாகும். ஆட்சியரகத்தில் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி) விரிவாக்க அலுவலர் (கணக்குகள்) (1), உதவியாளர்கள் (7), இளநிலை உதவியாளர்கள் (6), தட்டச்சர் (4), சுருக்கெழுத்தர் (1), ஒட்டுநர் (1), ஆவண எழுத்தர்கள் (3), அலுவலக உதவியாளர் (5) ஆகியவர்கள் சேர்ந்ததாகும். மதிய உணவு பிரிவிற்கு நேர்முக உதவியாளர், (மதிய உணவுத் திட்டம்) பொருப்பாளராகவும் கணக்கு அலுவலர் (1) உதவியாளர்கள் (2) இளநிலை உதவியாளர் (1), அலுவலர் உதவியாளர் (1) மற்றும் ஒட்டுநர் (1) ஆகியோரும் உள்ளனர். சிறுசேமிப்புப் பிரிவிற்கு நேர்முக உதவியாளர் (சிறு சேமிப்பு மற்றும் பரிசுச்சீட்டு) உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியவர்கள் ஒவ்வொரு பதவியும் உள்ளது.

6.4.3. மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் நிலைகளுக்கிடையே கோட்ட வளர்ச்சி அலுவலகம் ஒன்றுள்ளது. அவை வட்டார வளர்ச்சி அலுவலகங்களின் பல்வேறு வேலைகளை ஒருங்கிணைக்கவும், கட்டுப்படுத்தவும் செய்கிறது. ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலகமும், வட்டார வளர்ச்சி அலுவலர் (1), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கணக்குகள்) (1), உதவியாளர் (5). இளநிலை உதவியாளர் (4) தட்டச்சர் (1) சுருக்கெழுத்தர் (1). ஒட்டுநர் (1) மற்றும் அலுவலக உதவியாளர் (2), அடங்கியதாகும்.

6.4.4. ஊராட்சி ஒன்றிய நிலையில் பணியமைப்பு என்பது, வட்டார வளர்ச்சி அலுவலர் (1) , கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் (1), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (1), விரிவாக்க அலுவலர் (9) ஆகியவர்களும், திட்ட செயற்கடமைப்பகுதிகள் சிறுசேமிப்பு மற்றும் பரிசு சீட்டு, மதிய உணவுத் திட்டம், சமூக நலம் (RLEGP) கால்நடை, கூட்டுறவு மற்றும் ஆதிதிராவிடர் நலம் ஆகியவைகளாகும். எனவே, விரிவாக்க அலுவலர் (9), ஊரக நல அலுவலர் (10), DWCRA (1) பொருத்துபவர் (1), ஊராட்சிப் பொறியாளர் (1), உதவி ஒன்றியப் பொறியாளர் (1), மேற்பார்வையாளர்கள் (2), சாலை ஆய்வாளர்கள் (3), உதவியாளர்கள் (2), கணக்காளர் (3), இளநிலை உதவியாளர் (5), ஒட்டுநர் (1) ஆவண எழுத்தர் (1), அலுவலக உதவியாளர் (5), காவலாளி (1), மற்றும் ஒட்டுநர் (1) ஆகியவர்களாகும்.

6.4.5. மாவட்டம் மற்றும் அதற்கு கீழ் உள் ஊரக வளர்ச்சிப் பணிகளை செய்வதற்கான நிர்வாக அமைப்பை நோக்குமிடத்து ஊராட்சி ஒன்றிய நிலையில் போதுமான தொழில் நுட்ப மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் போதுமான அளவில் உள்ளனர். ஆனால் ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் போதிய தொழில் நுட்பம் மற்றும் இதர பணியாளர்கள் இல்லை. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையை மாவட்ட ஊராட்சியுடன் இணைத்து முகமையிலுள்ள அனைத்துப் பணியாளர்களையும் மாவட்ட ஊராட்சிக்கு மாற்றுதல் செய்ய அரசிற்கு இக்குழு பரிந்துரை செய்கிறது. பல மாநிலங்களில் ஊராட்சிகளில் போதுமான எண்ணிக்கையில் பணியாளர்கள் உள்ளனர். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை ஊராட்சியில் ஒரே ஒரு உதவியாளர் மட்டும் இருக்கிறார். இந்நிலையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளைத் திருத்தி அமைத்தல் மிகவும் அவசியமாகிறது. திட்டப் பணியாளர்களை அந்தந்த ஊரக உள்ளாட்சிகளுக்கு மாற்றம் செய்வதும் அவசியமாகும். அவ்வாறு பணியாளர்களை மாற்றம் செய்வது என்பது சில சிக்கல்களை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, மூன்றடுக்கு உள்ளாட்சிகளின் சிறப்பான நிர்வாக முன்னேற்றங்களுக்கான ஆலோசனை வழங்க தனியாக நிபுணர் குழு ஒன்றினை அமைக்க இக்குழு பரிந்துரை செய்கிறது. அந்நிபுணர் குழுவில் அண்ணா மேலாண்மை நிறுவனம் (AIM) சென்னை வளர்ச்சிக்கல்வி நிறுவனம் (MIDS) சென்னை பொருளாதாரப் பள்ளி (MSE) மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் (SIRD) மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம் பெறுவர்.

6.4.6. மாநில நிதிக்குழு நிதி அதிகார ஒப்படைப்பிற்கான பரிந்துரையை கவனத்தில் கொண்டு எம்மாதிரியான நிர்வாக சீரமைப்பை கொண்டு வர வேண்டும் என்பது குறித்தும் பரிந்துரை செய்திருக்கும். அத்தகைய ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். கிராம வளர்ச்சிக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளை பயனுள்ள நிறுவனங்களாக மாற்றுவதற்கு அரசின் தலையீடு அவசியமாகிறது.

## பணியாளர் பிரச்சனைகள்

6.5.1. பல்வேறு துறைகளில் குறிப்பாக பள்ளிக் கல்வித் துறைப் பிரதிநிகள் எங்களிடம் கூறிய வலுவான கருத்துக்களின் அடிப்படையில் பள்ளிக்கூடப் பணியாளர்களை ஊராட்சிகளின் நேரடி கட்டுபாட்டிற்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்ற எங்களது அணுகுமுறையை மாற்றிக் கொண்டோம். ஊராட்சி பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்களை உள்ளூர் ஆசிரியர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய ஊராட்சிகளுக்கு வாய்ப்பு அளிக்கலாம் என்ற எங்களது அணுகுமுறையைக் கல்வித்துறையின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து மாற்றிக் கொண்டோம். ஊராட்சிபள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்களை உள்ளூர் ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய ஊராட்சிகளுக்கு வாய்ப்பு அளிக்கலாம் என்ற எங்களது அணுகுமுறையைக் கல்வித்துறையின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து மாற்றிக்கொண்டோம். போதுமான ஆசிரியர்கள் இல்லையென்றால் ஆரம்ப கல்வியை சரியான முறையில் போதிக்க இயலாது. போதிய ஆசிரியர்களை நிர்வாகத்தினால் நியமனம் செய்ய முடியவில்லையென்றால் கிராம மக்களும், பெற்றோர் ஆசிரிய கழகங்களும் இணைந்து நிதி ஆதாரங்களை திரட்டி தேவைப்படும் ஆசிரியர்களை நியமனம் செய்ய தயங்கக் கூடாது. பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை, கிராம பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்களை நீண்ட நாட்களாக காலியாக வைத்திருப்பதை தவிர்க்க வேண்டும். கூடுதலாக ஆசிரியர்களை நியமனம் செய்ய உள்ளூரிலேயே ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இவ்வாறு ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது இதர சிக்கல்கள் எழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

6.5.2. உள்ளாட்சி அமைப்புகளே தங்களது சொந்த அலுவலர்களையும் பணியாளர்களையும் வைத்துக் கொள்வதின் அவசியத்தை இக்குழு உணர்ந்துள்ளது. நியமனம், மாற்றம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரங்கள் அவைகளிடம் இருக்க வேண்டும். தமிழ்நாடு ஊராட்சிகளி சட்டப்பிரிவு 108 மற்றும் 109ன் படி பள்ளி ஆசிரியர்களும், சுகாதாரப் பணியாளர்களும் அரசுப் பணியாளர்களாகக் கருதப்பட்டு அவர்களுக்கு பணிப் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் அரசு ஊழியர்களாக தொடரும் பட்சத்தில் பள்ளிகளும், ஆரம்ப சுகாதார நிலையங்களும் திறம்பட செயல்படுவதை உறுதி செய்வதற்காக அவர்களை ஊராட்சிகளுக்கு அயல் பணியில் நியமனம் செய்யலாம் என்ற கருத்தும் உள்ளது. சுகாதாரம் மற்றும் கல்வி வசதி அளிப்பது ஊராட்சி முக்கிய கடமையாகும். எனினும், இத்தகையப் பணியாளர்கள் மாற்றத்தில் பெருவாரியான ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் ஈடுபடுவதால் அரசிற்கு ஏராளமான பிரச்சனைகளை உருவாக்கும் என மாநில திட்டக்குழு உணர்கிறது. எனவே, இத்தகைய பணிமாற்றங்கள் அல்லது வேறு ஈடுபாடுகள் மற்றும் அதனால் ஏற்படும் நிர்வாக சிக்கல்களை கவனமாக பரிசீலிக்கப்பட வேண்டும். அவ்வாறு அரசு பரிசீலிக்கப்படும் போது அரசு கீழ்க்காணும் மூன்று நிலைகளை கருத்தில் கொள்ளவோம்.

1) கல்வி மற்றும் சுகாதாரப் பணியாளர்களை பணிப் பாதுகாப்புடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுதல் செய்வது.

2) அல்லது அவர்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அயலிடை பணியில் அனுப்புவது.

3) உள்ளாட்சி அமைப்புகள் தாங்களாகவே புதிய பதவிகளுக்கும், காலியிடங்களுக்கும் பணியாளர்களை நியமிக்க அனுமதித்தல். இது படிப்படியாக மக்களாட்சி பன்முகப்படுத்துதலை நிறைவு செய்ய ஏதுவாகும்.

தற்போதுள்ள பணியாளர்கள் அரசு ஊழியர்களாகவே தொடரலாம். வருங்காலத்தில் உள்ளாட்சி அமைப்புகள் தங்களுக்கானப் பணியாளர்களை நியமிக்கலாம். புதிய ஆரம்பப் பள்ளிகள், சுகாதார நிலையங்கள், மற்றும் துணை நிலையங்கள் நிறுவவும் பணியாளர்களை நியமனம் செய்யவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கலாம். காலப்போக்கில் மேற்படி நிறுவனங்களை நிர்வகிக்க அவர்களது சொந்தப் பணியாளர்களே இருப்பார்கள்.

## தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் ஆலோசகர்களை ஈடுபடுத்தல்

6.5.3. தொழில் நுட்ப வல்லுநர்களை கிராமம் முதல் மாவட்டம் வரையிலான நிர்வாகத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகளின் விரைவான முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கிறோம். இது முன் என்றுமில்லாத வளர்ச்சிக்கான சூழ்நிலையை உருவாக்கும். தற்போது தொழில் நுட்ப பணியாளர்களும், துறைசார்ந்த பணியாளர்களும் போதுமான அளவில் இல்லை. துறை சார்ந்த பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் எண்ணம் விரும்பத்தக்கதல்ல. அதிகப்பட்சமான துறை சார்ந்த பணியாளர்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுநியமனம் செய்வது ஒரு மாற்று ஏற்படாகும். கேரளாவில் ஓய்வு பெற்ற அலுவலர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்ட

தன்னார்வ தொழில்நுட்பக் குழு (Voluntary Technical Corps) அமைக்கப்பட்டு இக்குழு உள்ளாட்சி அமைப்புகளுக்கு திட்டங்கள் தீட்டுதல், ஆய்வு செய்தல், தொழில் நுட்ப பணிகளில் ஆலோசனை வழங்கல், செயற்படுத்துதல் போன்ற பணிகளில் உதவி செய்கிறது. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் இவ்வாறாக கவனமாக தீட்டப்பட்ட கொள்கைகளை பின்பற்றலாம்.

## மனிதவள மேம்பாடு (பயிற்சி, மனமாற்றம்)

6.5.4. அடிமட்ட மக்களாட்சி நிறுவனங்களில் அரசியல்வாதிகளும் மற்றும் அரசுப் பணியாளர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றுவது தவிர வேறு வழியில்லை. இவ்வாறான நிர்வாக மற்றும் மனப்பான்மை மாறுதல்கள் ஏற்பட சிறிது காலம் பிடிக்கும். சுதந்திரமான இணையான, நல்லிணக்கமான பயிற்சியானது மனப்பான்மை மாறுதலுக்கும், மாநிலத்தில் உள்ளாட்சி நிறுவனங்கள் ஆழமாக வேறூன்றுவதற்கும் விரைவாக வழிவகுக்கும். அதிகாரப் பரவலாக்கத்திற்கு பயிற்சி, மனம மாற்றம் தேவைப்படுகின்றன.

6.5.5. உள்ளாட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிகள் மற்றும் அலுவலர்களின் புதிய பங்கு பற்றி விழிப்புணர்ச்சி ஏற்பட அவர்களுக்கு தேவையான பயிற்சியளிக்கப்பட வேண்டும். மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் அரசியல் தலைவர்களுக்கு தயக்கம் காட்டும் அதிகாரிகளிடமிருந்தும், தொழில்நுட்ப வல்லுநர்களிலிருந்தும் அதிகாரங்களை மாற்றித் தருவது என்பது எளிதான காரியம் அல்ல. மனப்பான்மை மாறுதல் தற்போதைய தேவையாகும். அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் புத்துணர்ச்சியூட்ட பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

6.5.6. தலைவர்கள், தலைமை நபர்கள், வட்ட உறுப்பினர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு உள்ளாட்சி அமைப்பின் பணிகள், அவர்களது உரிமைகள், கடமைகள், பொறுப்புகள் குறித்து பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

6.5.7. ஊராட்சிப் பணியாளர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் (நிர்வாக மற்றும் தொழில் நுட்பம்) குறித்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். உள்ளாட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்களின் தங்களின் பங்கினை முழுவதும் அறிந்து கொள்வதற்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்

## திட்டங்கள் ஒருங்கிணைப்பு

6.6 தற்போதைய வளர்ச்சித் திட்டங்கள் ஒவ்வொரு துறை சார்ந்த பிரிவுகளாக அமைந்துள்ளது. இது அதிகப்பட்ச பயன் பெறுவது என்பது பொருளாதார கொள்கைக்கு முரணானது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சமுகத் துறை மேம்பாட்டுத் திட்டங்களில் இச்சூழ்நிலை குறிப்பாக காணப்பட்டது. நாங்கள் ஏற்கனவே தெரிவித்தபடி பல்வேறு துறைத் திட்டங்களுக்கான நிதி, மற்றும் செயல்படுத்துநர்கள் ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கப்படவேண்டும் என்று எதிர் நோக்குகிறோம். ஒட்டு மொத்த சமுதாய நலனை கருத்தில் கொண்டு திட்டங்கள் செயல்படுத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். அதற்கு இடையூறாக இருக்கின்ற அனைத்து தடைகளை அகற்ற வேண்டும். திட்ட ஒருங்கிணைப்புமூலம் அதிக பட்ச பலனை பெறுவதற்கு ஏதுவாக தேவையான வழிகாட்டு நெறிமுறைகளை மாவட்ட திட்டமிடல் குழுவிற்கு வழங்க வேண்டும.

## உள்ளாட்சி அமைப்புகளுக்கான திட்ட ஆய்வு அதிகாரங்கள்

6.7 அரசு மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் மூலம் செயற்படுத்தப்படும் திட்டப் பணிகளை ஆய்வு செய்வதற்குரிய அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு தமிழ்நாடு ஊராட்சி சட்டப்பிரிவு 114 (2) வழிவகை செய்கிறது. மாவட்ட ஊராட்சிகளும் திட்டப் பணிகளை ஆய்வு செய்வதற்கான அதிகாரங்களை பெறும் வகையில் அரசு இச்சட்டப் பிரிவினை விரிவு படுத்த வேண்டும்.

## கணக்கு மற்றும் தணிக்கை

6.8.1. உள்ளாட்சி அமைப்புகளுக்கு திறமையான கணக்கு மற்றும் தணிக்கை ஏற்பாடுகள் தேவைப்படுகிறது. ஊராட்சி . ஊராட்சி ஒன்றியம், மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு நடைமுறை விபரங்களை தெரிவிக்க கணக்கு மற்றும் தணிக்கை வழிகாட்டி நூல்கள் அவசியமாகும். இத்தணிக்கை நிதி மற்றும் பட்டியல் தணிக்கை மட்டுமில்லாமல் தொழில்

நுட்ப மற்றும் பணித் தணிக்கையாகவும் அமைய வேண்டும். உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு பொறுப்புகளை தணிக்கை செய்யும் அளவிற்கு தற்போதைய உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை அமையவில்லை. உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்விருக்கின்ற தொழில் நுட்ப பணிகளைத் தணிக்கை செய்வதற்கேற்ப தொழில் நுட்ப தணிக்கை குழு ஒன்றை நியமிக்க அவசியமாகிறது.

6.8.2. உள்ளாட்சி நிதி கணக்குகள் துறை 1980–ஆம் ஆண்டு துவக்கப்பட்டு இயக்குநர் துறையின் தலைவராகவும், 1329 பணியாளர்களுடன் செயற்பட்டு வருகின்றது. அங்கு 358 உதவி ஆய்வாளர்கள், 327 துணை ஆய்வாளர்கள், 78 உதவி இயக்குநர்கள் மற்றும் 16 இதர முதுநிலை அலுவலர்கள் இத்துறையில் உள்ளனர். இவ்வலுவலகர்கள் நகர மாநகராட்சிகள். நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், பல்கலைக்கழகங்கள், வட்டார நூலகக் குழுக்கள், அங்காடிகள் குழு ஆகியவற்றின் கணக்குகளின் தணிக்கையை ஏற்றுக் கொள்கிறார்கள். இத்துறையின் வேலையைப் பாகுப்படுத்தினால் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி கணக்குகள் ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியங்களின் கணக்கு அலுவலர்கள் தணிக்கைச் செய்யப்படுகின்றதென வெளிப்படுத்தப்படுகிறது. மாவட்ட ஊராட்சி என்பது ஒரு புதிய நிறுவனம் என்பதால், நடைமுறையில் எவ்வித தணிக்கை ஏற்பாடும் நடைமுறையில் இல்லை. இருந்தபோதிலும், 1996–97 ஆம் ஆண்டிலிருந்து உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரகம் மாவட்ட ஊராட்சி கணக்குகளை தணிக்கைக்கு எடுத்துக் கொள்ளும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்கள்/ பொறுப்புகள்/திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் ஒப்படைக்கப்படுவதால் 3 கட்டங்களிலுள்ள நடவடிக்கைகளின் எண்ணிக்கை மிகப் பெரியளவில் அதிகரித்துள்ளது. ஊராட்சி ஒன்றிய கணக்குகளில் மட்டும் 1.4.96 அன்று 97,440 எண்ணிக்கை தணிக்கை குறிப்புகள் உள்ளதென கண்டறியப்பட்டது.

6.8.3. உள்ளாட்சி நிதி இயக்குனரகம் மற்றும் கள பணியமைப்புகள் முற்றிலுமாக வலுப்படுத்தப்பட வேண்டும். குழுவானது ஆலோசனை வழங்குவது என்னவென்றால் (1) பல்கலைக் கழகங்கள் மற்றும் விற்பனை குழுக்கள் தணிக்கை செய்கடமைகளை பட்டயக் கணக்கர்களிடம் ஒப்படைக்க வேண்டும். உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் கட்டுப்பாட்டிலிருந்து எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்வதினால் உள்ளாட்சி நிதி கணக்குகள் துறையின் பணியாளருக்கு வேலைப்பளு குறையும். உள்ளாட்சி அமைப்புகளின் கூடுதலான பணிகளை தணிக்கை செய்ய இது ஏதுவாகும் (2) பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்ததுறை மூலம் கண்டறியப்பட்ட அதிகப்படியான பணியாளர்களை உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பலாம். (3) உள்ளாட்சி அமைப்புகள் மேலும் திறம்பட பணிபுரிவதற்கு ஏதுவாக, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தொடர் உடன் தணிக்கை முறையினை ஏற்படுத்துவது அவசியமாகிறது.

6.9. ஊரக உள்ளாட்சி மன்றங்களில் வரப்போகும் ஆண்டுகளில் வளர்ச்சிப் பணிகளின் முக்கியத்துவம் அதிகரிக்கும் ஒவ்வொரு வேலையிலும் மதிப்பிடுதல், நிருவாக மற்றும் தொழில்நுட்ப ஒப்பளிப்பு, அளவுகோல்களை சரிபார்த்தல் மற்றும் பட்டியல்களை தீர்வு செய்தல் ஆகிய பணிகள் உள்ளடங்கியுள்ளன. ஊராட்சியில் ஒரேயொரு உதவியாளர் இருப்பதால் அவரால் இது போன்ற மதிப்பிடுதல் மற்றும் ஒபபளிப்பிடுதல் ஆகிய பணிகளை செய்ய இயலாது. திட்டங்களுக்கும், பணிகளுக்கும் நிருவாக ஒப்பளிப்புச் செய்வதற்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு போதுமான அதிகாரங்கள் உள்ளன. ஆனால் தொழில்நுட்ப ஒப்பளிப்பிற்கு அவர்கள் தொடர்புள்ள மற்று துறையை நம்ப வேண்டியுள்ளது. இதன் காரணமாக திட்டங்கள் செயற்படுத்துவது தாமதமாகின்றன. எனவே ஊரக உள்ளாட்சி மன்ற மூன்று நிலைகளில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க பட வேண்டும் மற்றும் நிர்வாகம், தொழில்நுட்பம் மற்றும் நிதி ஆதாரங்கள் அளித்தல் ஆகியவை தேவைப்படுகிறது. கூடுதலாக நிதி அதிகாரங்களை வழங்கும் அதே வேளையில் அந்நிதியை நல்லவிதமாக பயன்படுத்தப் படுவதையும் அரசு உறுதி செய்யவேண்டும். திட்டங்கள் மதிப்பீடுகள் தயார் செய்தல், பலவித நிர்வாக, தொழில்நுட்ப மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கல், ஒப்பந்த புள்ளிகள் கோருதல், பணிகளை எடுத்து செய்தல் ஆகியவற்றில் எந்தவித ஒளிவு மறைவும் இன்றி வெளிப்படையாக செய்தல் வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெறும் நிகழ்வுகளை அறியவும், அங்குள்ள கோப்புகளை பார்வையிடுவதற்கும் அப்பகுதியிலுள்ள வாக்காளர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். எளிதான நடைமுறைகள் பற்றிய விவரம் பணி நடைமுறை நூல்களில் குறிப்பிடப்பட வேண்டும். கருத்து வேறுபாடுகளும், தேவையற்ற பயத்தையும் போக்க பணிக் குழுக்களுக்கு தெளிவான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

## செயலாக்கமும் பொறுப்பும்

6.10.1 உள்ளாட்சிகளுக்கான நிர்வாக அமைப்புமுறை அவ் உள்ளாட்சிகளின் மேலாண்மை பொறுப்புகள் மற்றும் பங்கு பற்றி தெளிவாக குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட பணிகள் மற்றும் சேவைகள் செய்வதற்கு யார் பொறுப்பானவர்கள் என்பது பற்றியும் நிதி மற்றும் நிர்வாக அமைப்புகள் தெளிவாக குறிப்பிட வேண்டும். நிதி மற்றும் பொருள் இலக்கு மற்றும் சாதனை விபரங்கள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். நிர்வாக மற்றும் நிதிநிலை பற்றி பதில் சொல்ல வேண்டிய ஒவ்வொரு அலுவலரும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு பணிகள் எந்த அளவில் முடிக்க வேண்டும் என்பது குறித்த விபரங்கள் அடங்க வேண்டும். நிர்வாக மற்றும் தொழில் நுட்ப அலுவலர்கள் போன்று தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் பதில் சொல்ல கடமைப்பட்டவர்களாவர். ஆனால் அவர்களது சாதனை ஒவ்வொரு தேர்தலிலும் மக்களால் தீர்மானிக்கப்படும். எனவே, அவரது அரசியல் பொறுப்புள்ளமை தேர்தலுக்கு மட்டுமே உள்ளன. ஆனால் நிர்வாகம் மற்றும் நிதி பொறுப்புள்ளமைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தெளிவாக தெரிவிக்க வேண்டும்.

6.10.2. துறைத் தலைவர்கள், மாவட்ட அலுவலர்கள், மற்றும் மாவட்ட நிலையின் கீழுள்ள அலுவலர்கள் ஆகியோருடைய கடமை, செய்கடமைகள், ஊராட்சிகளுக்குள்ள பொறுப்புகள் ஆகியவை பற்றி தெளிவான வழிகாட்டு நெறிமுறைகள் இருத்தல் வேண்டும். அதனால் திட்டப்பணிகள் சரிவர செயற்படுத்த ஏதுவாகும். சில துறை அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்பு மற்றும் துறைகளுக்கிடையே இணைப்புப் பாலமாக திகழ வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளுக்கான கடமைகளை மாவட்ட அளவில் மற்றும் அதற்கு கீழுள்ள அலுவலர்கள் சரிவர செய்கிறார்களா என்பதனை கண்காணிக்க வேண்டும். சில தொழில் நுட்ப துறைகள் உள்ளாட்சிக்கு தேவைப்படும் தொழில் நுட்ப அறிவையும், ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

6.10.3. மாறுபட்ட சூழ்நிலையில் அரசு, அரசு அலுவலர்களின் கடமைகள், உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்புகள், கடமைகள் பற்றி பத்திரிக்கைகள் மற்றும் தொலைக்காட்சிகளின் மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்திட வேண்டும். மக்களாட்சி பரவலாக்கல் என்ற தத்துவத்திற்கு முரண்பட்டான பல சட்டங்கள், சட்ட முன்வடிவுகள் உள்ளன. அரசியலமைப்புச் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (1994) மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய அதிகாரங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிடையே சச்சரவு எழுமாயின், பொருத்தமான திருத்தங்களை கொண்டு வருவதன் மூலம் அம்முரண்பாடுகளை நீக்க வேண்டும்.

## உள்ளாட்சி அமைப்பின் சொத்துக்கள், அவற்றிற்கு வழங்கிய சொத்துக்கள், பிற்காலத்தில் வரும் சொத்துகள் ஆகியவற்றைப் பேணுதல்

6.11 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வேலைக்கு உறுதியளிக்கும் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், வறட்சி நிவாரண திட்டங்கள் மற்றும் இதர சிறப்புத் திட்டங்கள், மூலம் சமூகச் சொத்துக்கள் ஆகியவை தோற்றுவிக்கப்பட்டு உள்ளாட்சி நிறுவனங்களிடம் பராமரிப்புகாக வழங்கப்பட வேண்டும். அவைகளின் சாலை, குடிநீர் வழங்குதல், பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவற்றை சிறப்பாக பராமரித்தல் குறித்து இவ்வறிக்கைகள் தனியே குறிப்பிடப்பட்டுள்ளது. இதர இனங்கள் அதாவது சமூக நல மையங்கள், மதிய சத்துணவு மையங்கள், கசிவு நீர் குட்டைகள் மற்றும் இதர நீர் பிடிப்பு அமைப்புகள், மகப்பேறு மையங்கள், மருந்தக கட்டங்கள், சமுதாய கிணறுகள் முதலியனவாகும். இச்சொத்துக்கள் பல மேம்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் தோற்றுவிக்கப்பட்டடுள்ளன. இதரத் துறைகளான கல்வி, சமூக நலம் முதலியன இதுவரை பராமரிக்கப்பட்டு வந்த மதிய உணவு மையங்கள் இனி ஊராட்சி ஒன்றிங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும். வறுமை ஒழிப்புத் திட்ட செயல்பாட்டுடன் சொத்துக்களை உருவாக்கலையும் சேர்த்து அவற்றைப் பராமரிக்கவும் ஊராட்சி மன்றம் தனது சொந்த நிதியிலிருந்து செலவிட பொறுப்பேற்க வேண்டும். பராமரிப்புக்காக ஆண்டு ஒதுக்கீடுத் தவிர சிறப்புத் திட்டங்களின் கீழ் தனியாக எதுவும் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. ஊராட்சி ஒன்றிங்கள் ஏற்கனவே உள்ள அடிப்படை வசதிகள் செய்ய செலவிட முடியாமல் உள்ளதால். அவ்வொன்றியங்கள் சொந்த நிதி ஆதாரங்கள் மூலம் கூடுதலான பொறுப்புகளை ஏற்க முடியாது. இச்சொத்துக்களை பராமரிப்பதற்கான பொறுப்பு தற்பொழுது ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சமுதாய மக்கள், சமுக சொத்து என பின்னிப்பிணைந்த நிலையில் ஊராட்சிகள் உள்ளன. எனவே இச்சொத்துக்களை அவர்கள் பராமரிப்புக்கு போதுமான நிதியளிக்க வேண்டும். அரசானது ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் எச்சொத்துக்களைப் பேணுதல் வேண்டுமென்று வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிட வேண்டும். நிதி ஒதுக்கீடு பொறுப்புகளை ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி

ஒன்றியங்களுக்கு மாற்றப்படும் பொழுது சொத்துக்கள் பராமரிப்பதற்கும் வழிவகைச் செய்ய வேண்டும். தோற்றுவிக்கப்பட்ட மொத்த சொத்து மதிப்பீட்டில் நிர்ணயிக்கப்பட்ட விழுக்காட்டில் பேணுதல் மானியம் ஊராட்சிகளுக்கு ஈடான அடிப்படையில் கிடைக்க வேண்டுமென்பதுடன் அச்சொத்துக்களை சரியாகவும் முறையாகவும் பராமரிக்க வேண்டும்.

## தகவல் முறை

6.12. அடிப்படை விவரம் அடிப்படை தரமான, முறையான மற்றும் நன்கு வடிவமைப்பில் சரியான விவர முறைத் தோற்றுவிக்கப் தேவைப்படுகிறது. விவரமும் அடிப்படை விபரமும் செல்வதும் திட்டங்களைச் செயலாக்கவது, அடிப்படை விவரமும் அடிப்படைவிவரமும் செல்வதும், திட்டங்களைச் செயலாக்குவது, அடிப்படை பணி வசதிகள் முதலியன ஊராட்சிகளிடமிருந்து ஊராட்சி ஒன்றியத்திற்கும் மாவட்ட ஊராட்சிகளுக்கும் செல்வது இன்றியமையாததாகும். மாவட்ட தகவல் மையம் (DISMIC) இதில் முக்கிய பங்கு வகிக்கும் எனவே, இக்குழுவானது ஊரக செய்தி முறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கணிப்பொறி மென் பொருள் தயாரிப்பதை மேற்கொள்ள வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. தேசீய தகவல் மையம் தயாரித்த மென்பொருள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மேற்கொண்டு ஊராட்சி நிலையில் திட்ட அடிப்படை விவரத்தை காலமுறையாக சேகரிக்கப் பயன்படுத்த வேண்டும். ஊரக வளர்ச்சி இயக்குநரகம் நிலையான அடிப்படை குழு வைத்துக் கொண்டு ஊரக தகவல் முறையை செயல்முறையாக்கி, தேவையான நிருவாக மற்றும் தொழில் நுட்ப வழிகாட்டலை அளிப்பதுடன் ஊரக தகவல் முறை செயல்முறைத் திட்டத்தை கண்காணித்தும் வரவேண்டும். ஊராட்சியிலுள்ள அலுவலர்கள் புள்ளி விபரங்களை சேகரித்து ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்பும் பணியில் ஈடுபடுகின்றனர். இந்நிலை மாற்றப்பட வேண்டும். ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், விண்ணப்பங்கள், தகவல் அனுப்பும் முறை ஆகியவற்றை எளிதாக்க மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் (SIRD) கேட்டுக் கொள்ளப்பட வேண்டும் என்று இக்குழு அரசிற்கு பரிந்துரை செய்கிறது. கணிப்பொறியைப் பயன்படுத்தி எல்லோரும் உபயோகப்படுத்தும் படியான எளிதான ஒரே மாதிரியான பதிவேடுகள், விண்ணப்ப படிவங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

## பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் குழுக்கள்

6.13.1. சட்டத்தின் பிரிவு 94–ல் ஊராட்சிகள் (அனைத்தும் 3 நிலைகளில்) ஊராட்சிகளின் ஆய்வாளர் ஒப்புதலுடன் குழுக்கள் அமைக்கலாம். இப்பிரிவை மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி ஆகியவை தொடர்புள்ள மன்றங்களின் ஏற்புக்கேற்ப குழு அமைக்க தகுந்த திருத்தம் கொண்டுவர வேண்டும். இக்குழுக்கள் செய்கடமைகள் மற்றும் பொறுப்புகளை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் உறுதி செய்ய வேண்டும். பிரிவு 95–இன் படி ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்கு இணைக் குழுக்கள் அமைத்து. அதுபோன்ற அமைப்பானது ஊராட்சி ஆய்வாளரின் ஏற்புக்கேற்ப கருத்து வேறுபாடுகள் தகராறுகள் தீர்க்க நிர்ணயம் செய்யும் ஊராட்சிகளுக்கென தனிக்குழுக்கள் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. ஊராட்சி ஒன்றியம் கீழ்க்கண்ட குழுக்களை அமைக்க சட்டம் வழிவகுத்துள்ளது. அதாவது நியமனங்கள் குழு (96(1). வேளாண் உற்பத்திக் குழு (96(1)(ஆ) (1) கல்விக்குழு (96(1)(இ) மற்றும் பொதுநோக்கு குழு (96(1)(இ) மேலும் பிரிவு 96(1) மாநில அரசானது தேவைப்படும் இதர குழுக்களை அமைக்க அதிகாரமளித்துள்ளது. சட்டப் பிரிவு (97 (1) (அ)–இல் எதிர்நோக்குவது என்னவென்றால் மாவட்ட ஊராட்சியானது (1) உணவு மற்றும் வேளாண்மை (2) தொழில் மற்றும் தொழிலாளர் (3) பொதுப்பணிகள் (4) கல்வி மற்றும் நல்வாழ்வு (5) நல நடவடிக்கைகள் ஆகிய நிலைக் குழுக்கள் அமைக்கலாம். பிரிவு 97 (1) (ஆ)–இல் மாவட்ட ஊராட்சி கூடுதல் நிலைக் குழுவானது தேவைப்படும் என்று நினைத்தால் அதை அமைக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ஆய்வாளர் களுக்கென்று கொடுக்கப்பட்டுள்ள பணிகள் தொடர்பான சட்டப்பிரிவுகள் திருத்தப்பட்டு அந்த பொறுப்பபுகளை உள்ளாட்சி அமைப்புகள் பொறுப்பேற்று செயல் படுத்துமாறு வழிவகை செய்ய வேண்டும்.

6.13.2. (அ) வரி, நிதி, கணக்குகள் மற்றும் திட்டமிடுதல் (ஆ) கல்வி மற்றும் நல்வாழ்வு (இ) நல நடவடிக்கைகள் மற்றும் பொது விநியோகத் திட்டம் (ஈ) பணிக்குழு ஆகிய நிலைக் குழுக்களை ஊராட்சிகள் அமைக்கலாம் என்று இக்குழு ஆலோசனை நல்குகிறது.

6.13.3. சட்டப்பிரிவி 96–இன் கீழ் ஏற்கனவே உள்ள நான்கு நிர்ணயிக்கப்பட்ட குழுக்களுடன் கூடுதலாக பின்வரும் குழுக்கள், ஊராட்சி ஒன்றியம் சரியாக செயல்பட அமைக்கலாம் என இக்குழு பரிந்துரை செய்கிறது. (1) சாலைப் பணிகள், வீட்டு வசதி, குடிநீர் வழங்குதல் மற்றும் பொதுப்பணி ஆகிய துறைகளை கவனிக்க பணிக்குழு. (2) நிதி ஆதாரங்களை அதிகரித்தல், மானியங்கள் விடுவித்தலும் பயன்படுத்தலும், கணக்குகள் மற்றும் தணிக்கைப் பராமரித்தல், ஊராட்சி ஒன்றிய நிலையில் திட்டமிடுதலைத் தயாரித்தல் போன்ற துறைகளின் நடவடிக்கையை மேற்கொள்ள நிதி, வரி மற்றும் திட்டமிடுதல் குழு (3) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள், பழங்குடியினர்கள், வறுமை ஒழிப்பு, ஊரக வளர்ச்சி, பொது விநியோகத்திட்டம். நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைகளில் நடவடிக்கையை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை கவனிக்க மக்கள் நல்வாழ்வுக் குழு

6.13.4. (1) நிதி மற்றும் திட்டமிடுதல் (2) சமூக நலம், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் நலம் (3) குறைந்தபட்ச அடிப்படை பணிகள் ஆகிய நிலைக் குழுக்கள் மாவட்ட ஊராட்சிகளில் அமைக்க இக்குழு பரிந்துரை செய்கிறது.

6.13.5. இக்குழுக்களை அமைக்கும்போது திட்டப் பணிகள் தயாரித்தல், செயலாக்கல் போன்ற பணிகளை அக்குழுக்களுக்கு வழங்கப்பட வேண்டும். அரசு நிறுவனங்கள், தலைமை அலுவலகங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவை எடுத்த முடிவுகளை ஆய்வு செய்வதற்கும் தொடர் நடவடிக்கைகள் எடுப்பதற்கும் இக்குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

## நிலைக்குழுவிற்கு அதிகாரமளித்தல்

6.14 மாநில அரசானது உள்ளாட்சிகளுக்கு அதிகாரங்கள் ஒப்படைப்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதாலும், இக்குழுவின் முதல் அறிக்கையின் மீது ஏற்கெனவே விரைந்து முடிவுகள் எடுக்கப்பட்டமையாலும் இரண்டாம் மற்றும் இறுதி அறிக்கையின் மீதும் அரசு இறுதியான முடிவுகளை எடுக்கும் என இக்குழு நம்பிக்கை கொண்டுள்ளது. எனினும் அரசு பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டாலும் அதன் மீதான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் போது செயலாக்கத்தில் சில பிரச்சினைகளும் சந்தேகங்களும் எழலாம் எனவே, பரிந்துரைகளை விரைவாகவும் திருப்திகரமாகவும் நடைமுறைப்படுதத மாநில அளவில் அதிகாரமளிக்கப்பட்ட நிலைக்குழு ஒன்று ஏற்படுத்த இக்குழு ஆலோசனை வழங்குகிறது இக்குழுவிற்கு அரசு தலைமைச் செயலர் தலைவராக இருப்பார் அவ்வப்போது தேவைப்படும் விளக்கங்களையும் உத்திகளையும் அளிப்பதற்கு இக்குழு அதிகாரம் பெற்றிருக்கும்

## மாநில வளர்ச்சி சபை

6.15 இத்துடன், தேசிய அளவில் உள்ள தேசிய வளர்ச்சி சபை போன்று மாநில வளர்ச்சி சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் இக்குழு பரிந்துரை செய்கிறது இச்சபையின் தலைவராக மாண்புமிகு மாநில முதல்வரும் அதன் உறுப்பினர்களாக மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள், மாநகராட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், மூத்த நிர்வாக அலுவலர்கள் மற்றும் மாநிலத்திட்டக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் இருப்பர். இச்சபை காலாண்டுகளுக்கு ஒரு முறை கூடி மாநில அளவிலான வளர்ச்சிப் பணி முன்னேற்றத்தையும் மாவட்ட அளவிலான முக்கிய வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றத்தினையும் ஆய்வு செய்யும். இதனால் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றங்களில் நல்ல விளைவுகள் ஏற்படுவதற்காக உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படும் அதிகார ஒப்படைப்பு உண்மையிலேயே எதிர்பார்க்கும் பலன்களைப் பெறுவதற்கு உறுதி செய்யப்படும். மேலும் வளர்ச்சிப் பணிகளில் பங்கேற்பவர்கள் தங்கள் பகுதி வளர்ச்சி பற்றி மட்டுமல்லாது மாநில அளவில் ஒட்டு மொத்த வளர்ச்சி பற்றியும் அக்கரை கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.

## சட்ட மன்றத்திற்குப்பதில் சொல்லும் பொறுப்புகள்

6.16 உள்ளாட்சி அமைப்புகளின் நடவடிக்கைகள் மற்றும் நிதி சார்ந்த செயல்பாடுகள் குறித்து சட்ட மன்றத்திற்குப் பதில் சொல்லும் பொறுப்பு யாருடையது என்ற கேள்விக்குரிய பதில் இன்னும் முடிவு செய்யப்பட வேண்டியுள்ளது. உள்ளாட்சி அமைப்புகள் தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனங்களாகும் என அரசியலமைப்புச் சட்டம் எதிர்பார்த்தாலும் அவை மாநில சட்ட மன்றங்களுக்கு உட்பட்டவையாகவே உள்ளன இந்த இரு நிலைகளையும் வரையறுத்து நிலைநிறுத்த ஒரு எல்லைக்கோடு அவசியமாகிறது. மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளின் அன்றாட நடவடிக்கைகள் மீது கேள்விகள் எழுப்பப்படுவது தவிர்க்க முடியாதது. ஆனால் இவ்வமைப்புகளின் அன்றாட நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படாமல் இருக்க சட்ட மன்றங்களுக்கு குறைந்த பட்சமாகத் தேவைப்படும் தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை ஆய்வு செய்யவும் அதுபற்றி சட்டமன்றம் விவாதித்து அங்கீகாரம் அளிக்கலாம் என இக்குழு கருதுகிறது. அத்துடன் உள்ளாட்சிகளின் பணிகள் பற்றி சட்டமன்ற அன்றாட நிகழ்ச்சிகளில் பல்வேறு கேள்விகளுக்கு அனுமதியளிப்பது பற்றி வழிகாட்டு நெறிமுறைகளை சட்டமன்றமே உருவாக்கலாம். இதுபோன்ற வாய்ப்பு உருவாக சிறிதுகாலம் ஆனாலும், உள்ளாட்சி அமைப்புகள் சட்ட மன்றத்திற்குப்பதில் சொல்லும் பொறுப்பு குறைக்கப்படாமல் அவை சுதந்திரமாகச் செயல்பட ஒரு நல்ல சூழ்நிலை உருவாக உதவிபுரியும்.

## ஊரக உள்ளாட்சிகள் மற்றும் தொடர்ப்பு

6.17 அமைப்புகள் அடிப்படையில் அரசியல் சார்பற்ற, சமூக நல நோக்கம் மற்றும் லாபம் கருதா சமுதாயப்பணி ஆற்றுபவை. அவை சமுதாயத்தின் அடிமட்ட மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை. ஊரகப் பகுதிகளில் இந்நிறுவனங்கள் ஆற்றும் பணிகளின் வெற்றியும், நிலைப்பாடும் அந்நிறுவனங்களின் சுயநலமற்ற வலிய முயற்சிகளின் அடிப்படையில் அமையும். சமுதாய பங்கேற்பைச் செயற்படுத்துவதில் அரசு சாரா அமைப்புகள் அதிகமாக ஈடுபட வாய்ப்புள்ளவை. எனவே அரசு சாரா அமைப்புகளை கிராம வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டுவதில் மட்டுமின்றி திட்டப் பணிகளை செயல்படுத்திலும். ஆய்வு செய்வதிலும், திட்டம்பற்றி பயிற்சிகள் அளிப்பதிலும் ஈடுபடுத்த வேண்டும். மாவட்ட ஊராட்சி, மாவட்டத்திலுள்ள அரசு சாரா அமைப்புகள் அனைத்தையும் கணக்கிலெடுத்து அவற்றின் குறிப்பிட்ட பணிகள், திட்டங்கள் அவை செயலாற்றும் பகுதி ஆகியவைகளைக் கண்டறிய வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் அரசு சாரா அமைப்புகளுடன் நெருங்கி, ஒருங்கிணைந்து செயலாற்ற மாவட்ட ஊராட்சி ஒரு இணைப்புப் பாலமாக பணியாற்ற முடியும். மாவட்ட நிலைக்குழுக்கள், இணைக்குழுக்கள் மற்றும் ஊராட்சி இதர அமைப்புகளில் சில அரசு சாரா அமைப்புகள் ஈடுபடுத்தப்பட வேண்டும். சமுதாய உள்கட்டமைப்புக்களான, சாலைகள் குடிநீர் விநியோகம் போன்றவற்றைப் பராமரிப்பதில் சில அரசு சாரா அமைப்புகள் மிகவும் உதவிகரமான பணியைச் செய்து வருகின்றன. மிகச்சிறந்த முறையில் செயல்பட்டு வரும் சில அபைப்புகளிடம் ஊராட்சிப்பணிகளையும் திட்டங்களையும் சட்ட ஒப்பந்தங்கள் அடிப்படையில் ஒப்படைக்கலாம்.

## ஊரக உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் பயன்பெறுவோர் குழுவுடன் தொடர்பு

6.18 நிலம் மற்றும் நீர் போன்ற அரிய இயற்கை வளங்களைச் சரியான முறையில், திறமையாகவும், ஒளிவு மறைவின்றியும் பயன்படுத்தி நிர்வகிப்பதை உறுதி செய்ய பயன்பெறுவோர் குழுக்களை அமைக்கலாம். உதாரணமாக பாசனப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் செயல்படும். பாசன நீர் பயன்படுத்துவேர் குழுக்கள் வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள நீர்ப்பிடிப்புப்பகுதி பயன்பெறுவோர் குழுக்கள் செயல்படுவதைக் குறிப்பிடலாம். வேளாண்மை வளர்ச்சி பன்னாட்டு நிதி நிறுவனம். (IFAD) மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் (DWCRA) அமைக்கப்பட்டுள்ள சுயஉதவி குழுக்கள் நலிந்த பிரிவினர்க்கான முன்னேற்றத்திட்டங்களை நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றன. பயன்பெறுவோர் குழுக்கள் மற்றும் ஊராட்சிகளுடனான தொடர்பானது இணக்கமான சூழ்நிலையை உருவாக்கும். குறிப்பிட்ட நலத்திட்டம் மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் கீழ் உள்ள பயன்பெறுவோர் குழுக்களும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளும், திட்டப்பணிகளின் முழுப்பயனும் கிராம மக்களுக்குக் கிடைப்பதற்காக ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும். பயன்பெறுவோர் குழுக்களுடன் நேரடித் தொடர்பு கொள்ள ஊராட்சி அமைப்புகளில் கிராம ஊராட்சிகளே மிகப் பொருத்தமான அடிமட்ட அமைப்பாகும். பல்வேறு திட்ட செயலாக்கப்பணிகளில் பயன்பெறுவோர் குழுக்களை ஒருங்கிணைத்துச் செயலாற்ற ஊராட்சி ஒன்றியங்களும் மாவட்ட ஊராட்சிகளும் ஏற்பாடுகளைச் செய்து

கொள்ள வேண்டும். விரைவான ஊரக வளர்ச்சிக்கு இத்தகைய அமைப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுமாறு பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்கும், அரசுத்துறைகளுக்கும் வழிவாட்டும் நெறிமுறைகளை வகுத்துக் கொடுக்க வேண்டும்.

### வாய்ப்பு வசதியற்றோர் மேம்பாட்டிற்கான முக்கியத்துவம்

6.19 வாய்ப்பு வசதியற்றோரான, பெண்கள், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு பிரதிநிதித்துவம் அளிக்க அரசியாமைப்புச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளதை நாங்கள் நினைவில் கொள்கிறோம். எனினும் அவர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முழுமையாக பிரதிபலிக்க சிறிது காலம் ஆகும். ஆகவே அவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற சிறப்பு திட்டங்களையும் புதிய யுக்திகளையும் கையாள்வது தற்போதைக்கு பொருத்தமானதாக இருக்கும். மற்ற திட்டங்களைப் பொருத்தவரை ஊராட்சிகளுக்கு தங்கள் பகுதி மேம்பாட்டிற்கான திட்டங்களின் தன்மைக் கேற்ப தாராளமாக நிதி ஒதுக்கப்படவேண்டும் என நாங்கள் வாதிட விரும்புகிறோம். வாய்ப்பு வசதியற்றவர்களின் மேம்பாட்டிற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான திட்டங்களையும் அதற்குப் போதுமான நிதிகளையும் ஒன்பதாவது திட்டத்தில் அரசு ஒதுக்கிவைக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

### சமூக கலாச்சார மரபுகளுக்கு அங்கீகாரமளித்தல்

6.20. சமுதாயம் தனது பொருளாதார மற்றும் சமூக செயல்பாடுகளை நமது பண்டைய கலாச்சாரம், பண்பாடு பரம்பரியங்கள் மற்றும் வழக்கங்களின் பலமான அடிப்படையில் நடைமுறைப்படுத்த முனைய வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளான கிராம சபை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் ஆகியவை வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் போது இத்தகைய நமது கலாச்சார பண்பாடுகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப் போகின்றன என்பதை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இவை சமுதாய வளர்ச்சிப் பணிகளை விரைவு படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குவற்கு வலுவான ஆதாரங்களாக அவ்வப்போது பயன்படக்கூடும். இது போன்று தற்போது உள்ள ஏற்பாடுகளைக் கவனத்தில் கொண்டு எங்கெல்லாம் பயன் தரக்கூடியதும் புதிதாக உருவாக்கப்படும் பணிகளும் குறைந்த செலவில் நடைபெறுகிறதோ அந்த ஊராட்சிகள் அதிகப்படியான வாய்ப்புகளைப் பெறும். அதனால் அவை தங்களை இன்னும் பலமுள்ள அமைப்புகளாக ஆக்கிக் கொண்டு அதிகப்படியான நிர்வாக அமைப்புகளை குறைத்து அவற்றின் மூலம் உள்ளூர் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வாய்ப்பு உண்டாகும். உள்ளூர் தகராறுகளை சமரச அடிப்படையில் தீர்த்து வைக்கும் பரம்பரை வழக்கங்களும் உள்ளன. அதனால் சட்ட பிரச்சனைகளையும் நீண்ட கால தாமதத்தையும் தவிர்க்க முடியும். ஊராட்சிகள் இத்தகைய பாரம்பரிய பழக்கவழக்கங்களைச் சார்ந்திருக்க வேண்டும். அதன் மூலம் உள்ளூர் தகராறுகளை கூடியவரை சமரசமாகத் தீர்த்து வைக்க தங்களது பலமான ஆதரவுகளை அளிக்க வேண்டும்.

### நடைமுறை விவரங்கள்

6.21. வளர்ச்சித் திட்டங்களும் அவற்றின் செயல்பாடுகளும் செயல் அலுவலர்கள் எடுக்கும் முடிவுகளின் படி நடைபெறும். அந்த முடிவுகள் அரசு ஆணைகளாகவும், விதி ஏடுகளாகவும், வழிகாட்டும் குறிப்புகளாகவும், சுற்றறிக்கைகளாகவும், மற்றும் விளக்கக் குறிப்புகளாகவும் அமையப் பெறும். ஆகவே செயல் அலுவலர்களின் விரிவான அறிவுரைகள் அளிக்கப்படாவிட்டால் இப்புதிய அமைப்புமுறை தடங்கலின்றி பணியாற்ற இயலாது. பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள் தங்களுக்கு மாற்றப்பட்டுள்ள செயற்பணிகளை எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என்று தெளிவான செயல் அறிவுரைகள் அவைகளுக்கு அளிக்கப்படவேண்டும். எனவே பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுக்கு மாற்றுதல் செய்யப்பட்டுள்ள செயற்கடமைகள் சுதந்திரமாகவும் தடங்கலின்றியும் நடைபெறுவதற்கு வசதியாக அனைத்து அரசுத் துறைகளும் தகுந்த ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும். அத்தகைய ஆணைகள் கீழ்க்கண்ட முக்கியமான கருத்துக்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். 1) பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள திட்டப்பணிகளுக்குரிய பயன் பெறுவோர் மற்றும் திட்டப்பணியிடங்கள் ஆகியவற்றைத் தாங்களே தேர்வு செய்து கொள்ளல் 2) சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் முன் ஒப்புதல் இன்றி எந்தவித நடவடிக்கைகளையோ அல்லது எந்த வித செலவினங்களையோ அரசுத் துறைகள் செய்யக் கூடாது. 3) பஞ்சாயத்து ஆட்சி

அமைப்புகள் தங்களின் முன் ஒப்புதல் பெறப்படாத செயற்பணிகளுக்குரிய நிதியை வழங்குமாறு அவைகளை கட்டுப்படுத்த முடியாது 4) தொழில்நுட்ப அனுமதிகள் வழங்கும் துறைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆணைகளை வழங்கவேண்டும். இல்லையெனில் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதாக எடுத்துக் கொண்டு மேல் நடவடிக்கைகளை உள்ளாட்சி அமைப்புகள் எடுக்கலாம். களப்பணியாளர்களிடம் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் உரிமையை மேலும் அதிக அளவில் வழங்கலாம். உள்ளாட்சிகள் சில தொழில்நுட்பத் திட்டங்களை தகுதிவாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ள அதிகாரம் அளிக்கலாம். 5) பொருட்கள் கொள்முதல் செய்தல் பணிகளை வாடகைக்கு அமர்த்துதல் மற்றும் அதற்குரிய நிதிக்கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்கான வழி முறைகள் தெளிவாகக் கொடுக்கப் படவேண்டும். 6) உள்ளாட்சிகளுக்கு மாற்றப்பட்டுள்ள இனங்களின் அரசுத்துறை உயர் அலுவலர்களின் பங்குகள் பற்றியும் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும். 7) உள்ளாட்சிகளின் திட்டப்பணிகளின் செயலாக்கங்கள் பற்றிய காலமுறை அறிக்கைகள் அனுப்புவது பற்றியும் அவற்றை ஆய்வு செய்வது குறித்தும் ஒவ்வொரு துறையும் வழிகாட்டுதல்கள் அளிக்க வேண்டும்.

### மக்களின் பங்கேற்பு

6.22. பொதுமக்கள் பங்கேற்பு கொள்வதற்கு கிராமசபை தான் முக்கியமான அமைப்பாக இருக்கும் என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். இது பற்றி இக்குழுவின் ஆலோசனைகளாவன. கீழ்கண்ட முறைகள் மூலம் கிராம சபைகள் வலுப்படுத்த வேண்டும். 1) சபைக்கூட்டம் நடைபெற கலந்து கொள்வோர் எண்ணிக்கை குறைந்தபட்சம் 10 சதவீதமாக இருக்க வேண்டும். (தற்போது உள்ள மூன்றில் ஒரு பங்கு குறைந்த பட்ச எண்ணிக்கை நடைமுறையில் சாத்தியமில்லை) 2) கிராம சபைக் கூட்டம் சம்பந்தமாக ஒவ்வொரு வீட்டிற்கும் எழுத்து மூலம் அழைப்பு அனுப்பப்பட வேண்டும் 3) கிராம சபைகளின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அரசு ஆணையின் நகல்கள் கிராம சபையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அளிக்கப் பட வேண்டும். கீழ்க்கண்ட விபரங்களை உள்ளடக்கியதாக கிராம சபைகளின் உரிமைகள் குறிப்பிட வேண்டும். 1) ஒவ்வொரு நிதியாண்டிலும் நடைபெறும் திட்டப் பணிகள் பற்றிய செயல் திட்டம் பற்றி தெரிந்து கொள்ளுதல் 2) செயல்படுத்துவதற்குரிய திட்டப்பணிகளின் விரிவான மதிப்பீடுகளைப் பற்றி தெரிந்து கொள்ளுதல் 3) பயன் பெறுவோரைத் தேர்வு செய்வதற்குரிய தகுதிகள், வழிமுறைகள் பற்றியும் அத்தகுதி மற்றும் வழிமுறைகளுக் கேற்ப பயன் பெறுவோர் தேர்வு செய்யப்படுகின்றனரா என்பது பற்றியும் தெரிந்து கொள்ளுதல் 4) கிராம சபை எல்லைக்குள் செய்யப்படும் பணிச் செலவுகள் பற்றி இனம் வாரியாகத் தெரிந்து கொள்ளுதல் 5) ஊராட்சிகள் எடுக்கும் முடிவுகளின் தன்மைகள் பற்றி தெரிந்து கொள்ளுதல் 6) நிதியாண்டில் அலுவலர்களின் பணிகள் பற்றி அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளுதல். 7) திட்டங்கள் தயாரிப்பதற்குரிய முன்னுரிமைகள் மற்றும் கருத்துரு தயாரித்தல் 8) கிராம சபைகளின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளின் அடிப்படையில் பணிகளை மேற்பார்வையிட உட்குழுக்களை அமைத்தல்.

கிராமசபைகளின் பொறுப்புகள் கீழ்கண்ட விவரங்களை உள்ளடக்கியதாக இருக்கும் 1) வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்கள் பற்றிய தகவல்களைப் பரப்புதல் 2) சுகாதாரம், கல்வி போன்றவைகளுக்கான வளர்ச்சி முகாம்களில் பங்கு பெறுமாறு ஆதரவு திரட்டுதல் 3) சமூக மற்றும் பொருளாதாரம் சம்பந்தமாக அவசியமான புள்ளிவிபரங்களைச் சேகரித்தல் 4) வளர்ச்சிப்பணிகளின் செயற்பாடுகள் குறித்து தகவல்களைச் சேகரித்தல் 5) வரி செலுத்துவது, கடனைத் திரும்பச் செலுத்துவது, சுற்றுப்புற சூழ்நிலையைப் பேணுவது மற்றும் சமூக நல்லிணக்கம் பற்றி பிரச்சாரம் செய்வது. 6) ஊராட்சி வளங்களை அதிகரிப்பதற்காக உள்ளூர் வள ஆதாரங்களைத் திரட்டுவது 7) வளர்ச்சிப்பணிகளை மேற்பார்வையிடல் 8) தொற்று நோய், இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் இடர்ப்பாடுகள் போன்ற செய்திகளை விரைவில் அனுப்புவதற்குரிய ஏற்பாடுகளை உருவாக்குதல் 9) நடாளுமன்றத்தில் 24.12.1996 அன்று நிறைவேற்றிய சட்டத்தில் பட்டியல் பகுதியிலுள்ள கிராம சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை, பட்டியலில் சேராத பகுதிகளில் உள்ள கிராம சபைகளுக்கும் விரிவு படுத்தப்படவேண்டும்.